1987 எப்ரல் 24]

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கியில் வழங்கும் விவசாயக் கடன்களுக்கு அடமானப் பத்திரம் எழுதி வாங்கப்படுகிறது. தனியாரைப் போல 13 வருடங்களுக்குச் செல்லும். அதற்கு மேலும் செல்லுமா? காரணம் விவசாயிகள் அடமானப் பத்திரம் வைத்து கடன் வாங்கிவிட்ட பிறகு இருபது வருடங்கள் கழித்து விற்றுவிடுகிறார்கள். அதற்குப் பிறகு அரசு அதிகாரிகள் அந்த நிலத்தை வாங்கியவர்களிடம் கடனைக் கேட்கிறார்கள். இது எப்படி சரியாக இருக்கும்? 13 வருடங்கள் என்ற காலம் முடிந்துவிடுகிறது. ஆகவே நிலவள வங்கியில் வாங்கும் கடன்களுக்காக வைக்கப்படும் அடமானப் பத்திரங்களுக்கு எத்தனை ஆண்டுகள் உயிர் உண்டு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அது பற்றி விவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் அது பற்றிய விவரத்தைச் சொல்லுகிறேன்.

குளத்தூர் தாலுக்காவை இரண்டாகப் பிரித்தல்.

476—(*வினா எண். 10620) திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலைக்கேற்பவும் தேவைக்கேற்பவும், காலப்போக்கில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள குளத்தூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்தமைப்பது குறித்து ஆய்வு செய்யப்படும்.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தாலுக்கா மிகப் பெரிய வட்டமாக இருக்கிறது. இதைப் பிரிக்க வேண்டும் என்பது குளத்தூர் தொகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும். மானிய கோரிக்கையின் போது, இந்த தாலுக்காவை இரண்டாகப் பிரித்து இலுப்பூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தாலுக்கா ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். எனவே இந்த ஆண்டிலேயே புதிதாகப் பிரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 24

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியபடி 11 வகையான செயற்குறிப்புகள் இருக்கின்றன. அதிலே குளத்தூரை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை குளத்தூர் வட்டம் என்றும் மற்றொரு பகுதியை இலுப்பூர் வட்டம் என்றும் வைக்க செயற்குறிப்பு இருந்து கொண்டிருக்கிறது. நடைமுறையில் அதன் தன்மைகளைப் பொறுத்து, நிதி ஆதாரத்தைப் பொறுத்து, வேறு பல சூழ்நிலைகளைப் பொறுத்து முடிவு காண வேண்டும். இதன் விவரக் குறிப்புகள் சிறப்பு ஆணையாளரிடமிருந்து தலைமைச் செயலகத்தில் உள்ள செயலாளருக்கு வந்து வருவாய்த் துறை ஆராய்ந்து பார்த்த பிறகு முடிவு எடுக்கப்படும். இந்த ஆண்டிலேயே நடைபெறும் என்று உறுதி கூற முடியாது. என்றாலும் எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு அதை ஆராய்ந்துதான் செய்ய முடியும்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம் முடுவார்பட்டி பிர்க்கா.

477—(*வினா எண் 12196) திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம் அலங்காநல்லூர் யூனியன் முடுவார்பட்டி பிர்க்காவை மதுரை தாலுகாவுடன் இணைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிப்பட்டி வட்டம் 7 குறுவட்டங்களையும் 78 கிராமங்களையும் உள்ளடக்கியது. மதுரை வடக்கு வட்டம் 12 குறுவட்டங்களையும் 182 கிராமங்களையும் கொண்டது. முடுவார்பட்டி குறுவட்டம் 13 கிராமங்களைக் கொண்டதாக வாடிப்பட்டி வட்டத்தில் இயங்கி வருகிறது. இக்குறுவட்டத்தை மதுரை வடக்கு வட்டத்துடன் இணைத்தால், மதுரை வடக்கு வட்டம் 13 குறுவட்டங்களையும் 195 கிராமங்களையும் கொண்டதாக மாறிவிடும். இதனால் மதுரை வடக்கு வட்டத்தின் ஆட்சி வரம்பும், பரப்பளவும் மிகுதியாவதோடு மக்களுக்குக் கூடுதலாக தொல்லைகளும் ஏற்படும். மேலும் இதனால் வாடிப்பட்டி வட்டம் 6 குறுவட்டங்களையும் 65 கிராமங்களையும் கொண்டதாகவும் குறைந்துவிடும். எனவே முடுவார்பட்டி குறுவட்டத்தை வாடிப்பட்டி வட்டத்திலிருந்து பிரிக்க வேண்டிய அவசியம் இப்போது ஏற்படவில்லை.